**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 155/2015**

| | | DEPOSITION OF WITNESS | DW.1 |
|---|---|---|---|
| NAME | பிரகாசம் | TALUK | குடியாத்தம் |
| FATHER NAME | இருசன் | RELIGION | |
| AGE | 45 | OCCUPATION | |
| VILLAGE | பெரியபாளையம் | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 03.02.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. எனக்கு எழுத, படிக்க தெரியுமா என்றால் தெரியாது. நான் 4வது வகுப்பு வரை படித்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தை யார் சொல்லி போட்டேன் என்றால் வக்கீல் சொல்லி போட்டேன். எனது தாத்தா பெருமாள் கவுண்டருக்கு மூன்று பிள்ளைகள். எனது அப்பா பெயர் இருசன். எனது அப்பாவிற்கு துரைசாமி, சண்முகம் மற்றும் பிரகாசம் (நான்), மகேஷ்வரி, கோட்டிஸ்வரி என மொத்தம் 5 பிள்ளைகள்.

2. நான் விவசாயம் செய்கிறேன். எனக்கு சொந்தமாக நிலம் உள்ளது என்றால் சரிதான். எவ்வளவு நிலம் உள்ளது என்றால் எங்கள் மூன்று பேருக்கும் சேர்த்து 3 ஏக்கரா 22 செண்ட் நிலம் உள்ளது. 3 பேரும் கூட்டாக அனுபவிக்கிறோமா என்றால் பாகம் பிரித்துக்கொண்டோம். பாகம் பிரித்துக்கொண்ட பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை.

3. பாகம் பிரிவினைக்கு முன்பு அந்த சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா 2 ஏக்கர் வாங்கினார். மீதி எப்படி பாத்தியப்பட்டது என்றால் அப்பா மற்றும் சித்தப்பா சேர்ந்து 1 ஏக்கரா 22 செண்ட் வாங்கினார்கள். 1 ஏக்கரா 22 செண்ட் வாங்கும்போது அளந்து பார்த்து வாங்கவில்லை என்றால் சரிதான், வரப்பை பார்த்து வாங்கினார்கள். எனது அப்பா இறந்து 25 வருடம் ஆகிறது எப்போது என தெரியாது. அதன்பிறகு சொத்தை நாங்கள் அளந்து பார்க்கவில்லை என்றால் சரிதான்.

4. எங்கள் சொத்து மற்றும் தாவா சொத்து அனைத்தும் பெரியபள்ளம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். அந்த பெரியபள்ளம் தான் தற்போது அண்ணாநகர் என அழைக்கப்படுகிறது என்றால் சரிதான். வாதி தாவா சொத்தில் இருக்கிறார் என்றால் அவர் அவர் சொத்தில் இருக்கிறார், நாங்கள் எங்கள் சொத்தில் இருக்கிறோம்.

5. எனது தாத்தா மற்றும் எனது அப்பா சொத்தை வாங்கியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் தான் சொத்தில் இருக்கிறோம் என்பதற்கு வருவாய் ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வேண்டும் என்றால் தாக்கல் செய்கிறோம். என்னிடம் காட்டப்படும் சர்வே எண்.234/1எ பட்டாவில் விஸ்தீரணம் எக்டேர் 73.50 என உள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே எண்.234/2–க்கு பட்டாவில் விஸ்தீரணம் எக்டேர் 49.50 என உள்ளது என்றால் சரிதான். அந்த பட்டாவில் மேற்படி சர்வே எண்கள் இருசு கவுண்டர் மகன் துரைசாமி, சண்முகம், பிரகாசம் என 3 பேர் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் எக்டேர் 1.23 என உள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6. என்னிடம் காட்டப்படும் சர்வே எண்.234/1எ–க்கான வரைபடம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது 234/2–க்கான வரைபடம் என்றால் சரிதான். மேற்படி வரைபடங்கள் வா.சா.ஆ.12 மற்றும் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வா.சா.ஆ.11 பட்டாபடி எனக்கு பாத்தியப்பட்டதே 3 ஏக்கரா 3 செண்ட் மட்டும் தான் என்றாலும் நான் சொல்வதுபோல் 3 ஏக்கரா 22 செண்ட் இல்லை என்றால் சரியல்ல பத்திரம் கொண்டு வருகிறேன். உண்மை தெரிந்துவிடும் என்பதால் தான் ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. என்னிடம் காட்டப்படும் பட்டாவில் உள்ள சர்வே எண்.334/3எ மற்றும் சர்வே எண்.334/3பி யார் பெயரில் உள்ளது என்றால் அரிகுமார் பெயரில் உள்ளது. அந்த பட்டாவின் படி அரிகுமார் பெயரில் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் 75.50 எக்டேர் உள்ளது. அந்த பட்டா படி அரிகுமாருக்கு 1 ஏக்கரா 86 செண்ட் வருகிறது என்றால் அவர் 1–3/4 தான் என்று சொன்னார் அவருடைய நிலம் இருந்தால் நாங்கள் என்ன செய்யபோகிறோம்.

8. பட்டா படி மற்றும் பத்திரப்படி அவர் அனுபவிப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் அவர் தான் அனுபவித்து வருகிறார், எனது பத்திரப்படி எனக்கு வர வேண்டும். அவரது பத்திரப்படி, பட்டாபடி அவர் அனுபவிப்பதில் ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை இல்லை. அதனால் அவருடைய அனுபவத்தை தொந்தரவு செய்ய மாட்டோம் என்றால் எங்களுடைய பட்டா படி அளந்து கொடுத்துவிட்டால் தொந்தரவு செய்யமாட்டோம்.

9. இதுவரை நான் சர்வேயரை வைத்து அளந்து கொடுக்க முயற்சி செய்யவில்லை என்றால் சரிதான். அரிகுமார் சர்வேயரை அழைத்து வந்து அளக்க முயற்சி செய்தாரா என்றால் செய்தார். அவர் அளக்க முயன்றபோது ஒவ்வொரு முறையும் சண்டை போட்டு நிறுத்திவிட்டேன் என்றால் சரியல்ல,

சண்டை போடவில்லை. எத்தனை முறை அளந்தார் என்றால் எனக்கு தெரியவில்லை. அவர் 2வது முறை அளக்க முயன்றபோது நான் தகராறு செய்து சர்வேயரை திருப்பி அனுப்பி வைத்தேன் என்றால் சரியல்ல.

10. தற்போதாவது என் இடத்தை அளந்து, கல் போட்டு கொள்கிறேனா என்றால் அளந்து கொள்கிறேன். நீதிமன்ற ஆணையர் நியமித்து என் நிலத்தையும் வாதி நிலத்தையும் அளப்பதில் ஆட்சேபனை உள்ளதா என்றால் எங்கள் சொத்து மூன்று பேர் பெயரில் உள்ளது அவர்களை கேட்டு தான் சொல்ல முடியும். நாங்கள் பாகப்பிரிவினை செய்துவிட்டதால் மற்றவர்களை கேட்க வேண்டிய அவசியமில்லை என்றால் சொத்து மூன்று பேரிடமும் உள்ளது அதையும் சேர்த்து தான் அளக்க வேண்டும். பாகப்பிரிவினை எப்போது செய்தோம் என்றால் தேதி, வருடம் ஞாபகமில்லை பத்திரம் உள்ளது.

11. பாகப்பிரிவினையில் எனக்கு ஒரு ஏக்கரா வந்தது. எனது அண்ணன் துரைசாமிக்கு எவ்வளவு வந்தது என்றால் தெரியவில்லை அதிகம் வைத்துள்ளார். மற்றொரு அண்ணன் சண்முகத்திற்கு எவ்வளவு வந்தது என்றால் தெரியவில்லை அவருக்கும் அதிகமாக வந்தது. யார் யாருக்கு எவ்வளவு வந்தது என தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12. வாதி சொத்திற்கு பக்கத்தில் என் சொத்து உள்ளது என்றால் சரிதான். வாதியின் நிலம் எந்தபக்கம் உள்ளது என்றால் என் சொத்திற்கு கிழக்குபக்கம் மூலையில் உள்ளது. வாதி என்ன பயிர் செய்கிறார் என்றால் வேறு ஆளுக்கு விட்டு கரும்பு நட்டுள்ளார். நான் கத்திரிக்காய் மற்றும் கனகாம்பரம் பூ நட்டுள்ளோம். வாதி நிலத்திற்கு தண்ணீர் உள்ளதா என்றால் இல்லை, வேலு நிலத்தில் இருந்து தண்ணீர் எடுத்துகொள்கிறார். தற்போது வாதி நிலத்தில் கிணறும் இல்லை, போரும் இல்லை என்றால் சரிதான். என் நிலத்தில் போர் உள்ளது. வேலு நிலத்தில் இருந்து தண்ணீர் இல்லை என்றால் வாதியால் பயிர் செய்ய முடியாது என்றால் சரிதான். இவ்வாறு பயிர் செய்யும் நிலையில் தான் வாதியிடம் அடிக்கடி சென்று தகராறு செய்கிறோம் என்றால் சரியல்ல.

13. கரும்பு பயிர் செய்யும்போது தான் மாடு மேய வைத்து தகராறு செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தகராறு செய்யவில்லை என்றால் தாவாப்படி தீர்ப்பாக ஆட்சேபனை இல்லை என்றால் ஆட்சேபனை இல்லை. வாதி எனக்கு சொந்தம் இல்லை. வாதியின் அப்பா பெயர் ஞாபகமில்லை. வாதியின் உடன் பிறந்தவர்கள் நான்கு ஆண் பிள்ளைகள், ஒரு பெண் பிள்ளை. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் என்ன போட்டுள்ளார்கள் என தெரியுமா என்றால் தெரியாது. பதிலுரையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படிக்க தெரியாது என்பதால் என்ன உள்ளது என தெரியாது.

14. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வக்கீல் அடித்து கொடுத்து கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். அதனால் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் என்னவென்று தெரியாது என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலம் மற்றும் பதிலுரையில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. வாதி அரிகுமார் ஏழை என்பதால் அடிக்கடி அவரிடம் சென்று தகராறு செய்கிறோம் என்றால் சரியல்ல. பட்டா படி எங்களுக்கு 3 ஏக்கரா 3 செண்ட் தான் பாத்தியப்பட்டது என்றாலும் பத்திரத்தை தவறாக எழுதி 3 ஏக்கரா 22 செண்ட் கேட்டு அவரிடம் தகராறு செய்கிறோம் என்றால் சரியல்ல. வாதி கோரியபடி தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

K KARTHICK ASATH
Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.